## இலக்கணம் - ஓரெழுத்து ஒருமொழி உரிய பொருளைக் கண்டறிதல்

ஓரெழுத்து ஒரு மொழி என்ற பகுதியிலிருந்து 5 வினாக்கள் கேட்கப்படலாம்.

தமிழில் உள்ள 247 எழுத்துகளில் நன்னூல் சூத்திரப்படி 42 எழுத்துக்களுக்கு மட்டும் தனித்த பொருளுண்டு.அவற்றில் ஏதாவது ஐந்து எழுத்துக்களைக் கொடுத்து அதற்கான பொருள் என்ன என்பதைப் போல வினா அமையும்.

முந்தைய தேர்வுகளில் இந்த 42 எழுத்துக்களில் இருந்துதான் வினாக்கள் கேட்கப்பட்டன.ஆனால் இப்போது நடைபெறும் தேர்வுகளில் அந்த 42 எழுத்துக்களையும் தாண்டி வினாக்கள் கேட்கப்படுகின்றன.

நன்னூல் சூத்திரப்படி தனிப் பொருளைத் தரும் 42 எழுத்துக்களைக் காண்போம்.

**உயிர் எழுத்துகள்:**
ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ
**'க' வரிசை:** கா,கூ,கை,கோ
**'ச' வரிசை:** சா,சீ,சே,சோ
**'த' வரிசை:** தா,தீ,தூ,தே,தை
**'ந' வரிசை:** நா,நீ,நே,நை,நோ
**'ப' வரிசை:** பா,பூ,பே,பை,போ
**'ம' வரிசை:** மா,மீ,மூ,மே,,மை,மோ
**'வ' வரிசை:** வா,வீ,வை,வெள
**'ய' வரிசை:** யா
பெரும்பாலும் நெடில் இனத்தில் வரும்.குறில் இனம் என்று பார்த்தால் உயிர் மெய் எழுத்துக்களான 'நொ' மற்றும் 'து' போன்றவை

மேற்கண்ட 42 எழுத்துக்களும் நன்னூல் குறிப்பிடப்படுபவை.

**ஓரெழுத்து ஒருமொழி**

| | |
|---|---|
| அ | எட்டு,அழகு,சிவன் |
| ஆ | பசு,ஆன்மா,எருது |
| இ | 'அரை'யின் தமிழ் வடிவம் |
| ஈ | ஈதல்,கொடுத்தல்,பறக்கும் பூச்சி |
| உ | சிவன்,ஆச்சர்யம்,இரண்டு(தமிழ்) |
| ஊ | ஊண்,இறைச்சி,உணவு |
| எ | வினா எழுத்து,ஏழு(தமிழ்) |
| ஏ | அம்பு,வினாப் பெருக்கம்,இறுமாப்பு |
| ஐ | தலைவன்,அரசன்,வியப்பு,ஆசான் |
| ஓ | மகிழ்ச்சி,வியப்பு,மதகுப்பலகை |
| ஔ | உலகம்,ஆனந்தம் |
| க | கடவுள்,பிரம்மன்,அக்னி,ஒன்று |
| கா | சோலை,காத்தல்,காவல் |
| கி | இறைச்சல் ஒலி |
| கு | பூமி,உலகம்,குற்றம் |
| கூ | பூமி,உலகம்,கூகை |
| கை | உறுப்பு,ஒழுக்கம்,சிறகு,ஒப்பனை |
| கோ | அரசன்,தலைவன்,பசு,இறைவன் |
| கௌ | கொள்ளு,தீங்கு,பற்று |
| சா | சாதல்,இறத்தல்,சோர்தல் |
| சி/சீ | இகழ்ச்சி,இலக்குமி,வெறுப்பு |
| சு | விரட்டுதல்,சுகம்,மங்களம் |
| சே | எருது,சிகப்பு,மரம் |
| சை | கைப்பொருள்,அருவெருப்பு,ஒலி |
| தா | தருதல்,கொடுத்தல்,கேடு |
| தீ | நெருப்பு,சினம்,தீமை,நரகம் |
| து | உண்,அசைதல்,உணவு |
| தூ | வெண்மை,தூய்மை,பகைமை |
| தே | தெய்வம்,கடவுள்,அருள் |
| தை | மாதம்,தைத்தல்,அலங்காரம் |
| நா | நாக்கு,சொ,நடு,அயலர் |
| நீ | முன்னிலை |
| நே | அன்பு,அருள்,நேயம் |
| நை | நைதல்,வருந்துதல் |
| நொ/நோ | துன்பம்,நோய் |
| ப | நூறு |
| பா | பாட்டு,அழகு,பாதுகாப்பு |
| பி | அழகு,பிறவினை விகுதி |
| பீ | பெருமரம்,மலம் |
| பூ | மலர்,பூமி,பிறப்பு |
| பே | நுரை,மேகம்,அச்சம் |
| பை | பசுமை,கைப்பை,இளமை(பையன்) |
| போ | போதல்,செல்லுதல் |
| ம | சந்திரன்,சிவன் |
| மா | பெரிய,விலங்கு,மேன்மை,மாமரம் |
| மீ | மேலே,உச்சி,ஆகாயம் |
| மூ | மூப்பு,முதுமை,மூன்று |
| மே | அன்பு,மேன்மை,மாதம்,மேலே |
| மை | அஞ்சனம்,கண்மை,இருள்,மலடு |
| மோ | மோத்தல்,முகர்தல் |
| ய | தமிழ் எழுத்து என்பதன் வடிவம் |
| யா | யாத்தல்,யாக்கை,ஒரு வகை மரம் |
| வ | கால் பாகம் |
| வா | வருதல்,தாவுதல்,உண்டாக்குதல் |
| வி | அறிவு,நிச்சயம்,ஆகாயம் |
| வீ | மலர்,விரும்புதல்,பறவை |
| வை | கூர்மை,வைத்தல்,வைக்கோல் |
| வௌ | கைப்பற்று,ஒலிக்குறிப்பு,திருகு |

**(எ.கா)**
மா-பெரிய,விலங்கு,மேன்மை,மாமரம்
இதில் 'பெரிய' என்பதற்கு இணையான 'உயர்ந்த' என்ற வார்த்தையையும் தெரிந்திருக்க வேண்டும்.

Answers